**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No.12/2024**

**2026** ம் வருடம் ஜீன் திங்கள் 08 ம் நாள் வாதி தரப்பு 1 வது சாட்சியத்தின் குறுக்கு விசாரணை வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திரு.லோகநாதன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.மாரிச்சாமி (PW1) | கிராமம்: | |
| கணவர் பெயர் | ; வழிவிட்டான் | தொழில் : | |
| வயது | : | | |

1 முதல் 4, 6 மற்றும் 7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. நானும் எனது அண்ணண்கள் சீனி , மல்லையன், பூச்சம்மாள் ஆகியோர்கள் சேர்ந்து ஞானகிருஷ்ணமூர்த்தி, கோட்டைச்சாமி, முருகன்,ராமர், மாரியம்மாள், முனீஸ்வரி மற்றும் சில நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த சில நபர்களின் பெயர் தற்போது நினைவில் இல்லை. வழக்கு தாக்கல்செய்வதற்கு விவரங்களை வழக்கறிஞரிடம் வாதிகளாகிய நாங்கள் நால்வருமோ கூறினோம். ஏனவே தாவா குறித்து அனைத்து விவரங்களும் எனது தாயார் மற்றும் அண்ணன்களுக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 4 ம் வாதி என்றால் சரிதான். எனக்கு முன்னதாக மூன்று வாதிகள் உள்ள நிலையில் வழக்கில் சாட்சிகளாக விசாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த பிராதிற்கு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் எனது வழக்கறிஞர் என்னிடம் அது பற்றி கூறவில்லை என்றாலும் அவர் என்னிடம் கூறினாரா என்று எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தின் சர்வே எண் 307/4. அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பட்டா எண் எனக்கு தெரியவில்லை. மேற்படி சர்வே எண் 307/4. குறித்துதான் பிராது தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தின் தற்போதைய சர்வே எண்ணும் 307/4 தானா என்றால் ஆமாம். பிராதில் சொத்து விவரங்கள் உள்ள இடத்தில் தாவா சொத்து இரண்டு உட்பிரிவுகளாக பிரிக்ப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தை சுற்றியும் என்ன சொத்துக்கள் அமைந்துள்ள என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை.

3. பிராதில் சொத்து விவர பட்டியலில் நான்குமால்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகே உள்ள

ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். சர்வே எண் 307/4 க்குரிய சொத்தின் பட்டா தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் தெரியவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னதாக வருவாய் ஆவணங்களை பார்வையிட்டு அதன் பிறகு வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரிதான். ஆனால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னதாக பட்டா குறித்து பார்வையிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நாங்கள் விவசாயம் செய்து வந்தோம். அந்த விவசாய பயிர்களை ஆடுகள் மேய்ந்ததால் கம்பி வேலி போட்ட போது பிரதிவாதிகள் வந்து பிரச்சனை செய்ததால் 2024 ம் வருடம் ஒரு நாள் வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேன்.

4. வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்த போது சொத்து எனது தகப்பனார் பெயரில் இருந்தது தெரியவந்தது. நான் வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றாலும் தாவா சொத்து குறித்து 01.01.1975 முதல் 16.10.2023 வரை வில்லங்கம் போட்டு பார்த்த போது எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படுகிற விவரங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.8 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 2024 ம் வருடம் நெல்பயிர்களை பயிரிட்டு இருந்தோம். இவ்வழக்கில் எங்களுக்கு சொந்தமானதாக நான் பிராதில் குறிப்பிட்டுள்ள தாவா சொத்தை தவிர்த்து வேறு ஏதேனும் சொத்துக்கள் எங்களுக்கு உள்ளதா என்றால் இல்லை. விவசாயம் செய்தால் பயிர் காப்பீடு செய்வதும் அடங்கல் ஆவணங்களின் குறிப்புகள் இருப்பது வழக்கம் என்றால் சரிதான்.

5. மேற்படி பயிர் காப்பீடு குறித்தும் அடங்கல் ஆவணங்கள் குறித்தும் எனக்கு தெரியாது. எனது அம்மாவிற்குத்தான் தெரியும். மேற்படி விவரங்கள் எனக்கு தெரியாத நிலையில் மேற்படி ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க எனது தாயாரை நீதிமன்றத்திற்கு வரவழைக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக இல்லை. எனது தாயாரை சாட்சியாக அழைத்தால் நாங்கள் தாக்கல் செய்திருப்பது பொய் வழக்கு என்ற விவரம் தெரியவந்துவிடும் என்பதால்தான் எனது தாயாரை அழைக்க தயாராக இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தை எனது தகப்பனார் நையினா முகமது என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார்.

6. அவ்வாறு கிரையம் பெற்றதாக சொல்லப்படுகிற ஆவணத்தின் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன். ஆனால் மேற்படி ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது.

அதைநான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நையினா முகமதுவின் தகப்பனார் பெயர் என்ன என்று பத்திரத்தின் வாயிலாக தெரிந்து கொண்டானே என்றால் இல்லை. மேற்படி என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1 ஆவணத்தில் ந.சே.சேகுஇப்ராகிம் மகன் நையினா முகமது என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி சேகுஇப்ராகிம் வகையராவிற்கு தாவா சொத்தை சுற்றிலும் பல சொத்துக்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ந.சே.சேகுஇப்ராகிம் என்பவருக்கு ந.சே.முகமது அம்பலம் மற்றும் ந.சே.முசாபுகனி அம்பலம் ஆகியோர்கள் சகோதரர்கள் என்றாலும் சொத்து உட்பட மற்ற சில சொத்துக்களும் மேற்படி மூவருக்கும் பாத்தியப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

7. தாவா சொத்து உட்பட மற்ற சொத்துக்களும் நையினா முகமதுவிற்கு எப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் நையினா முகமதுவிற்கு மேற்படி தாவா சொத்து எந்த வகையில் பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னதாக வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது அண்ணன் மகளான மதுபாலா எனும் 20 வயதுடைய பெண்ணிடம் கொடுத்து அவர் படித்து கூற அதன் பிறகு வழக்கு தாக்கல் செய்தேன். அவர் 2024ம் வருடம் ஒரு மாதம் படித்துக்காண்பித்தார். எனக்கு தேதி சரியாக நினைவில் இல்லை. எனது அண்ணன் மகளை சாட்சியாக விசாரித்தால் மேற்படி பத்திரம் குறித்து தெரியவரும் என்றால் அவரை சாட்சியாக விசாரிப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஏனென்னால் அவர் திருமணமாகி கைக்குழந்தையை வைத்துள்ளார். அவர் உள்ளூரில் உள்ளாரா என்றால் ஆமாம்.

8. வா.சா.ஆ.1 ஆவணத்தில் நையினா முகமது என்பவர " என் பாகத்திற்கு உரிய " சொத்தை என்று குறிப்பிட்டுள்ளதால் அவருடன் யார் யார் பாகம் செய்து கொண்டார்கள் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நையினா முகமதுவை விசாரித்தால் அந்த விவரம் தெரியும் என்றாலும் ஆனால் நான் அவ்வாறு விசாரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நையினா முகமதுவை வழக்கில் சேர்த்து விசாரித்தால்தான் அவ்வாறு சொத்து எந்த வகையில் பாத்தியப்பட்டது என்பது தெரியவரும் என்றால் அவர் தற்போது உயிருடன் உள்ளாரா இல்லையா என்பது கூட எனக்கு தெரியாது. நையினா முகமது பற்றி நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

9. நையினா முகமதுவையோ அவரது வாரிசுகளையோ விசாரித்தால் தாவா சொத்து குறித்த ஆவணம் வா.சா.ஆ.1 ஆவணம் பொய் என்பது தெரியவந்துவிடும் என்பதால்தான் அவர்களை பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நையினா முகமது அம்பலத்துடன் பிறந்தவர்கள் முகமது அலி அம்பலம் மற்றும் முகமது உதுமான் அம்பலம் ஆகியோர்கள் என்றாலும் சொத்து மேற்படி மூவருக்கும் பாத்தியப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் நையினா முகமதுவின் உடன் பிறந்தவர்கள் மற்றும் அவரது தகப்பனாருடன் பிறந்தவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தால்தான் வழக்கின் உண்மை நிலவரம் தெரிவரும் என்று கூறி இருக்கும் விவரத்தை தெரிந்துகொண்டே அவர்களை சேர்க்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

10. ஏனவே இந்த வழக்கு அவசியான தரப்பினர்களை ( Necessary parties ) சேர்க்காத தோசத்திற்கு உள்ளாகிறது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வழக்கு சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லப்படுவதற்கு பின்னிட்டு எனது தகப்பனார் பெயரில் பட்டா ஏற்படுத்தப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் இறந்த பின்பு அவரது வாரிசுகள் என்ற அடிப்படையில் எங்கள் பெயருக்கு பட்டா ஏற்பட்டதா என்றால் அது பற்றியும் எனக்கு தெரியவில்லை. பட்டா வாங்குவதற்கு நடவடிக்கை ஏடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் வீடு எங்களுக்கு சொந்தமானது ஆகும். நாங்கள் வீட்டு வரி, தண்ணீர் வரி, மின்சார வரி கட்டி வருகிறோம் என்றால் சரிதான். அதே போன்று விவசாய நிலத்திற்கு வரி தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வரி தாக்கல் செய்ததற்குரிய ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனாருக்குத்தான் அது குறித்து தெரியும். தாவா சொத்தில் நான் விவசாயம் செய்தேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் முதலில் விவசாயம் செய்தார். எனது தகப்பனாரின் இறப்பிற்கு பிறகு எனது அம்மா தாவா சொத்தில் விவசாயம் செய்தார். நையினா முகமதுவிற்கு தாவா சொத்து பூர்விக பாத்தியமா அல்லது அவரது சுயசம்பாத்திய சொத்தா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பூர்வீக சொத்து என்றால் அவரது மூதாதையரில் பெயரில் பட்டா ஏற்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான்.

11. எஸ்.எல்.ஆர் காலத்தில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நைனா முகமது அம்பலத்தின் தந்தை சேகுஇப்ராகிமின் உடன் பிறந்த சகோதரர் முசாபுகனி

அம்பலத்தின் மகன் ஜெயினுலாபத்தீன் அம்பலத்தின் பெயரில் தாக்கலாகி வந்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 1 மற்றும் 6 ஆம் பிரதிவாதி பெயருக்கு பட்டா ஏற்பட்ட விவரம் தெரியவந்தவுடன் அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் வடபுறம் உள்ள சொத்து ந.சே.முசாபுகனிஅம்பலத்திற்கும் தென்புறம் ந.சே.சேகுஇப்புராகிம் அம்பலத்திற்கும் பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வடபுறம் உள்ள சொத்தின் உரிமையாளரான முசாபுகனி அம்பலத்தின் காலத்திற்கு பிறகு அவரது ஒரே வாரிசான ஜெயினுலாபத்தீன் அம்பலம் அதை அனுபவம் செய்து வந்தார் என்றால் தெரியவில்லை.

12. பிராதில் சொத்து விவரங்கள் உள்ள இடத்தில் தாவா சொத்திற்குரிய பட்டா எண் 674 என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டா ஜெயினுலாபத்தீன் அம்பலத்தின் பெயரில் தாக்கலாகி வந்த எஸ்.எல்.ஆர் பட்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 15.08.1968 ம் தேதி ஜெயினுலாபத்தீன் அம்பலம் என்பவர் கமுதி கன்னார்பட்டியை சேர்ந்த லட்சுமணபிள்ளை என்பவருக்கு ரூ.1000 த்திற்கு மேற்படி தாவா சொத்தின் ஒரு பகுதியை பதிவு ஆவணத்தின் வாயிலாக ஒத்தி பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி ஒத்தியை சாட்டுதல் செய்து அதை 09.04.1974 ம் தேதி ஆறுமுகம் சேர்வைக்கு அதை கிரைய ஆவணம் பதிவு செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை.

13. தாவா சொத்து தென்புறம் உள்ள சொத்து ந.சே.சேதுஇப்ராகிம் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அவர் அனுபவத்தில் இருந்து அவர் காலமடைந்த பிறகு அவரது வாரிசுகளான நையினா முகமது அம்பலம், முகமது அலி அம்பலம், முகமது உதுமான் அம்பலம் ஆகியோருக்கு பாத்தியப்பட்டு அனுபவத்தில் இருந்து நையினா முகமது அம்பலம் கடந்த 13.06.1966 ம் தேதியன்றும் முகமது அலி அம்பலம் 06.08.1966 அன்றும் முகமது உதுமான் அம்பலம் 25.07.1970 ம் தேதி அன்றும் தனித்தனியாக பதிவு ஆவணம் மூலம் மேற்படி சொத்தை பதிவு ஆவணத்தின் வாயிலாக ஆறுமுகம் சேர்வைக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. ஆறுமுகம் சேர்வை என்பவர் ஜெயினுலாபத்தீன் அம்பலத்திடம் இருந்து 41 செண்ட்டையும் சேகுஇப்ராகிம் வாரிசுகளிடம் இருந்து 31 செண்டையும் கிரையம் பெற்று மொத்தம் 72 செண்டிற்கு தன் பெயரில் பட்டா

ஏற்படுத்தினார் என்றால் தெரியாது.

**( பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் அவர்கள் மேலும் சில ஆவணங்களை பார்வையிட்டு குறுக்கு விசாரணை செய்யவேண்டி உள்ளதால் ஒத்திவைப்பு கோரியதன் பேரில் கால அவகாசம் கருதி ஒத்தி வைப்பு வழங்கப்படுகிறது)**